# பெங்களூர் உயர்மறைமாவட்டம்

## இரக்கத்தின் யூபிலி ஆண்டு

டிசம்பர் 8, 2015
முதல்
நவம்பர் 20, 2016
வரை

### யூபிலி ஆண்டுக்காக திருத்தந்தையின் செபம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே! / வானகத் தந்தையைப் போல் இரக்கமுள்ளவராய் இருக்க/ நீர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கின்றீர்.// “உம்மைக் காண்பவர் / உம்மை அனுப்பினவரையே காண்கின்றார்” என்றும் / எங்களுக்குக் கூறியுள்ளீர்.// உமது திருமுகத்தை எங்களுக்குக் காட்டியருளும். // நாங்கள் மீட்படைவோம். / உமது இரக்கமிக்கப் பார்வை/ பணத்திற்கு அடிமைப்பட்டிருந்த சக்கேயுவையும், மத்தேயுவையும்,/ படைப்புப் பொருள்களில் மட்டும் மகிழ்வைத் தேடிய விபசாரப் பெண்ணையும், / மகதலா மரியாவையும் விடுவித்தது.// உம்மை மறுதலித்த பேதுருவை / மனம் நொந்து அழச் செய்தது. // மனம் வருந்திய குற்றவாளித் திருடனுக்கு / பேரின்ப வீட்டை உறுதி செய்தது. // “கடவுளுடைய கொடை எது என்பதை நீர் அறிந்திருந்தால்…”/ என்று சமாரியப் பெண்ணுக்கு கூறிய உமது வார்த்தைகளை / நீர் எமக்கே கூறியவை-களாக / நாங்கள் ஏற்று செவிசாய்ப்போமாக.// தனது வல்லமையை, / எல்லாவற்றிற்கும் மேலாக /மன்னிப்பு மற்றும் இரக்கத்தின் மூலம் வெளிப்படுத்தும்/ காணவியலாத தந்தையின் காணக்கூடிய திருமுகமாக /நீர் உள்ளீர்.// உயிர்த்த மகிமைமிக்க ஆண்டவராகிய/ உமது காணக்கூடிய திருமுகமாக / திருச்சபை இவ்வுலகில் திகழ்வதாக!// அறியாமை மற்றும் தவற்றில் வாழ்வோர் மட்டில் / இரக்கம் காட்டும் வண்ணம் / உமது அருட்பணியாளர்களை/ பலவீனத்தால் உடுத்த திருவுளம் கொண்டீர்.// அவர்களை அணுகிச் செல்லும் அனைவரும் / தாங்கள் தந்தையால் தேடப்படுவதை,/ அன்பு செய்யப்படுவதை, / மன்னிக்கப்படுவதை உணர்வார்களாக!// உமது ஆவியாரை அனுப்பி / எங்கள் ஒவ்வொருவரையும் / அவரின் அருள்பொழிவால் புனிதப்படுத்தியருளும்.// இதனால்/ இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டு /ஆண்டவரிடமிருந்து அருளைக் கொடுக்கும் ஆண்டாய் அமைவதாக.// புதுப்பிக்கப்பட்ட புத்துணர்வுடன் உமது திருச்சபை /ஏழைகளுக்கு நற்செய்தி,/சிறைப்பட்டோர் மற்றும் ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை,/ பார்வையற்றோருக்குப் பார்வை / என்ற நற்செய்தியை முழங்குவதாக!// இரக்கத்தின் அன்னையாம் புனித மரியாவின் பரிந்துரை வழியாக / இந்த மன்றாட்டுகளை நாங்கள் கேட்கின்றோம். // தந்தையோடும் தூய ஆவியாரோடும் / என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் நீரே. / ஆமென்.//